
# திராவிடத்தால் வாழ்கிறோம்

842

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

ர.பிரகாசு

121

**`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்தி வரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...**

## மாவூத் கிராமம்!

### யானைப் பாகன்களுக்கு அன்புப் பரிசு!

‘எல்லோருக்கும் எல்லாம்’ மட்டுமல்ல, யாராலும் கண்டுகொள்ளப்படாத எளியோரையும் கண்டு, அவர்களுக்கும் எல்லா வற்றையும் செய்து தருவதில், நமது திராவிட மாடல் அரசுக்கு நிகர் இல்லை என்பதை நிரூபிக்கும் வகையில், நிறைவேற்றப்பட்டிருக்கும் திட்டம், தெப்பக்காடு மாவூத் கிராமம்.

**முதுமலையின் மறுபக்கம்!**

பல்லுயிர் மண்டலமாக, இயற்கையின் தாய்மடியாகத் தாங்கி நிற்கும் நீலகிரி மலைத்தொடரின் வடமேற்கை வசீகரமாக்கி, நீலவானத்தை எட்டிப் பிடிக்கும் உச்சத்தில் நீண்டு வளர்ந்த வனம் ‘முதுமலை’. தமிழ்நாடு, கர்நாடகா, கேரளா என மூன்று மாநில எல்லைகள் சந்திக்கும் முக்கோணப் புள்ளி. ‘மரத்தில் தொங்கியபடி எதையோ கொறிக்கும் காட்டு அணில், அழகாய் எட்டிப் பார்க்கும் ஆந்தை, மரக்கிளையில் ஓய்வெடுக்கும் ஓணான், சலங்கை சத்தம் போல செவி குளிரச் செய்யும் சிற்றோடை’ என ஆஸ்கரை அள்ளி வந்த **‘தி எலிஃபன்ட் விஸ்பரர்ஸ்’** குறும்படத்தின் தொடக்கக் காட்சியில் முதுமலையின் பேரழகை விவரித்திருப்பார்கள்.



அத்தகைய பசுங்காட்டில் அங்கொன்றும் இங்கொன்றுமாய் ஒளிந்திருக்கும் மர வீடுகளும் மாலைநேர ஜீப் பயணமும், ஆங்காங்கே தென்படும் காட்டெருமைகளும் புலிகளும் சுற்றுலாப் பயண அனுபவத்தை அலாதி யாக்குபவை. இவை மட்டுமல்ல, அங்கே உள்ள தெப்பக்காடு யானைகள் முகாமில், பாகன்கள் தரும் பாதுகாப்புடன் யானைகளோடு நேரத்தைச் செலவிடுவதும், அவற்றுக்கு உணவளிப்பதும் மெய்மறக்கச் செய்யும் அனுபவங்கள். ஆனால், பாகன்களாக இருக்கும் அந்தப் பழங்குடி மக்களின் வாழ்வியல் சூழலும், பாதுகாப்பான வசிப்பிடம்கூட இல்லாத இன்னலும் சுற்றுலாப் பயணிகளோ, மற்றவர்களோ உணர்ந்திராத முதுமலையின் மறுபக்கங்கள்.

**ஆஸ்கர் தந்த கவனம்!**

ஆஸ்கர் வென்ற ‘எலிபென்ட் விஸ்பரர்ஸ்’ குறும்படத்தில் நடித்த யானைப் பாகன் பொம்மன் - பெள்ளி இணையரை, 2023-ஆம் ஆண்டு மார்ச்சில் சென்னைக்கு அழைத்துப் பாராட்டிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அவர்களுக்கான தேவைகள் குறித்துக் கேட்டறிந்தார். அப்போது, பொம்மன் - பெள்ளி தம்பதி வைத்த மிக முக்கியமான கோரிக்கை, யானைப் பாகன்கள் மற்றும் பராமரிப்பாளர்களுக்கான குடியிருப்புகளைக் கட்டித்தர வேண்டும் என்பது. குடிசை, மர வீடுகளில் வசிக்கும் அவர்களின் இன்னல்களைப் போக்கும் விதமாக, கோரிக்கை நிறை வேற்றப்படும் என்று அப்போதே உறுதியளித்தார் முதலமைச்சர். ஏனெனில், மலைக்காடுகளில் மழைக்காலங்களில் மர வீட்டிலோ அல்லது குடிசை வீட்டிலோ வசிப்பதை விட, கொடுமையானது இருக்க முடியாது.






“எங்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய வீடுகள் கிடைத்திருப்பதில் நாங்கள் மகிழ்ச்சியாக உள்ளோம். தெப்பக்காடு யானைகள் முகாமுக்கு அருகிலேயே, எங்களுக்கான வீடுகள் உள்ளதால், பணிக்கு வந்து செல்வதும் எளிதாக உள்ளது. அரசு செய்து கொடுத்திருக்கும் இந்த வசதி, முகாமில் உள்ள யானைகளுக்காக மேலும் அர்ப்பணிப்புடன் பணியாற்ற வேண்டும் என்ற ஊக்கத்தைத் தருகிறது”.



**-மு.மாறன், மாவூத்**



சுற்றுச்சூழல், காலநிலை மாற்றத்துறை மற்றும் வனத்துறை சார்பில், பூர்வாங்கப் பணிகள் தொடங்கப்பட்டன. தெப்பக்காடு யானை முகாம் பாகன்கள் மற்றும் காவடிகளுக்கு (பராமரிப்பாளர்) சுற்றுச்சூழலுக்குத் தகுந்த வகையில், ரூ.5.06 கோடி செலவில் 44 வீடுகளை கட்டித்தர திராவிட மாடல் அரசு திட்டமிட்டது. 2024-ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் கட்டுமானப் பணிகள் தொடங்கின. நடப்பாண்டு மார்ச் மாத இறுதியில் 44 குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டன. இதையடுத்து, மே 13-ஆம் தேதி நீலகிரிக்குச் சென்ற முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், புதிய குடியிருப்புகளைத் திறந்துவைத்து, சுற்றிப்பார்த்தார். குடியிருப்புச் சாவியைப் பயனாளிகளிடம் வழங்கி, அவர்களோடு உரையாடினார். பின்னர், அவர்களுடன் குழு புகைப்படமும் எடுத்துக்கொண்டார்.



> **எளியோரிலும் எளியோரின் தேவைகளை அடையாளங்கண்டு, அவற்றை நிறைவேற்றுவதிலும் முதன்மையானவர் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.**

**மாவூத் கிராமம்!**

அழகான தோற்றத்துடன், 44 வீடுகளும் தனித்தனிக் குடியிருப்புகளாக மட்டு மில்லாமல், ஒரு மாவூத் கிராமமாகவே கட்டியெழுப்பப்பட்டுள்ளது. ஒவ்வொரு வீடும் ஒரு படுக்கையறை வசதி கொண்டதாக அமைக்கப்பட்டுள்ளது. வனத்தின் சுற்றுச்சூழலைப் பாதிக்காத வகையில், மரங்களை வெட்டாமல் குடியிருப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. சாலைகள், கழிவுநீர்ப் பாதைகள், சோலார் தெரு விளக்குகள், வன விலங்குகளிடம் இருந்து பாதுகாப்பு தரும் வகையில் சோலார் தொங்கும் வேலிகள், குடிநீர் வசதிகள், குழந்தைகள் விளையாடு வதற்கான பூங்கா, சமூக மையம் உள்ளிட்ட பல்வேறு வசதிகள் இந்தக் குடியிருப்பில் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 22 வீடுகள் மாவூத்களுக்கும், 22 வீடுகள் காவடிகளுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளன. இதனால், முதுமலையில் நவீன வசதிகளுடன், ஒரு மாவூத் கிராமத்தையே கட்டியெழுப்பியிருக்கிறது திராவிட மாடல் அரசு.

முதுமலை தெப்பக்காடு யானைகள் முகாமைப் போலவே, ஆனைமலை புலிகள் சரணாலயத்தில் உள்ள கோழிக்கமுத்தி யானைகள் முகாம் பாகன்கள் மற்றும் காவடிகளுக்கும் 47 வீடுகளைக் கொண்ட மாவூத் குடியிருப்புகளை அமைத்துள்ளது நமது திராவிட மாடல் அரசு. எளியோரிலும் எளியோரின் தேவைகளை அடையாளங்கண்டு, அவற்றை நிறைவேற்றுவதிலும் முதன்மையானவர் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்.

**...சாதனை தொடரும்**

## பொய்கள்- புள்ளிவிவரங்கள் – குஜராத் மாடல்!

புள்ளிவிவரங்கள் நாட்டின் வளர்ச்சியை, வீழ்ச்சியை அறிந்துகொள்வதற்கு மிகவும் தேவையான ஒரு சிறந்த கணக்கியல் கருவியாகும். இன்றைய தகவல் தொழில்நுட்பப் புரட்சிக் காலத்தில், புள்ளிவிவரங்களைச் சிறப்பான முறையில் எடுக்கக்கூடிய, தொகுக்கக்கூடிய, பல தொழில்நுட்பத் திறன்கள் வந்தாலும், பா.ஜ.க. ஆட்சியில் பொய்கள்தான் புள்ளிவிவரங்களாக உலா வருகின்றன. அதிர்ச்சி அளிக்கும் வகையில், குஜராத் மாடல் புள்ளிவிவரம் குறித்து, சில நாட்களுக்கு முன், ‘இந்து’ ஆங்கில நாளிதழில் (மே-12-2025 - பக்கம்-9) ஓர் ஆய்வு வெளியாகி இருந்தது.

கொரோனா காலத்தில் இறந்தவர்கள் எண்ணிக்கையைக் குறைத்துக் காட்டியது பற்றிய உண்மைகளை, இரு ஆய்வாளர்களான சமீரின்வேணியும், விக்னேஷ் இராதாகிருஷ்ணனும் சுட்டியுள்ளனர். 2021-ஆம் ஆண்டில் கொரோனா காலத்தில் 5,812 நபர்கள் கொரோனா பாதிப்பால் இறந்தார்கள் என்று, பா.ஜ.க. குஜராத் அரசு அறிவித்திருந்தது. ஆனால், தற்போது குஜராத் இறப்பு புள்ளிவிவரங்களை ஆய்வுசெய்து, கொரோனா பாதிப்பால் இறந்தவர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 812-ஐ விட 44.2 மடங்கு அதிகமாக உள்ளது தெரியவந்துள்ளது. இன்றைய புள்ளிவிவரங்கள் ஆய்வின்படி. குஜராத் மாநிலத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 55 ஆயிரத்து 728 ஆகும். அதாவது நாட்டின் ‘கொரோனா கால தேசிய இறப்பு சராசரி’யைவிடக் குஜராத் இறப்பு எண்ணிக்கை அதிகம்.

இதேபோன்று மக்கள்தொகை அதிகமாக உள்ள, பா.ஜ.க. ஆளுகின்ற மாநிலங்களான உத்தரப் பிரதேசம் மத்தியப் பிரதேசம் ஆகியவற்றில் 19.5 விகித அளவில் பல இலட்சம் நபர்கள் இறந்துள்ளனர். புள்ளிவிவரங்களைச் சரியான அணுகுமுறை முறையில் ஆய்வு நடத்தினால், பல உண்மைகள் வெளிவரும். பாதிக்கப்பட்ட மக்களின் விவரங்களை அறிந்தால்தான், உரிய திட்டங்களை நிறைவேற்ற முடியும் என்பதுதான் புள்ளிவிவர ஆய்வுகளின் நோக்கம். ஆனால், இட்லர்களிடமிருந்தும், கோயபல்ஸ்களிடமிருந்தும் பொய்யையும் போரையும் பிரிக்க முடியாது.

-பேராசிரியர் மு.நாகநாதன்

## ஃப்ளாஷ்பேக்



### தஞ்சையில் தலைவருக்குப் பிரம்மாண்ட வரவேற்பு!



**சி.இறைவன்**

1969-ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவிற்குப் பிறகு, தலைவர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். அதைத் தொடர்ந்து தஞ்சை நகரக் கழகச் செயலாளர் எஸ்.நடராஜன் அவர்கள், தஞ்சையில் கலைஞருக்கு மிகப் பிரமாண்டமான வரவேற்புக்கு ஏற்பாடு செய்தார். அன்றைய தினம் காந்திஜி சாலையில் உள்ள எங்களது விற்பனையகத்தை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். அப்போது அவருடன் எடுத்துக் கொண்ட புகைப்படம் இது. உடன் எனது மூத்த சகோதரர் சி.நடராஜன், மாவட்டப் பொருளாளர் தங்கம், வட்டச் செயலாளர் துரை.வையாபுரி, நகர துணைச் செயலாளர் டி.பி.கண்ணன், ஆர்.ஜி.ராஜன் மற்றும் எனது சகோதரர்கள் சி.ராமகிருஷ்ணன், சி.பாலகிருஷ்ணன், சி.ராஜேந்திரன் மற்றும் பலர்.

**– சி.இறைவன்,**
**கழக சட்டத்திட்ட திருத்தக் குழு உறுப்பினர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## கருவூலம்

### புதுவை தி.மு.க. மீது அடக்குமுறை!

1954-ஆம் ஆண்டு, இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று புதுவை மற்றும் பிரெஞ்சுப் பகுதியில் போராடியவர்களை, புதுவை போலீசார் கொடூரமாகத் தாக்கினர். தி.மு.க. தொண்டர்கள் இருவர் காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்டு தாக்கப்பட்டனர். இணைப்பு முழக்கமிட்டு, ஊர்வலம் சென்ற 15 கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டு, சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131